| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| தண்.வசுந்தராதேவி,<br>எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து ஊடகங்கள். |

**ந.க.எண்.041612/எச்1/2019 நாள் : 07.05.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வு, ஜூன் 2019 — அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பிக்க தவறியவர்கள் சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) விண்ணப்பிப்பது தொடர்பாக – செய்திக்குறிப்பு வெளியிட கோருதல் – சார்பு.

-----

நடைபெறவிருக்கும் ஜூன் 2019, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுத அரசுத் தேர்வுத்துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) விண்ணப்பிக்கும் நாட்கள் குறித்த செய்திக்குறிப்பு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

தனித்தேர்வர்கள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி இச்செய்திக் குறிப்பை தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

'இது விளம்பரம் அல்ல' எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**<u>இணைப்பு:</u> செய்தி குறிப்பு**

**தங்கள் நம்பிக்கையுள்ள,**
**ஒம்/–**
**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
   – தங்கள் ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி, மாணவர்களை அனுமதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர்கள்
   – மேற்படி விவரத்தினை தங்கள் உள்ளூர் செய்தித்தாட்களில் செய்தியாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6</u>
<u>மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு சிறப்புத் துணைத்தேர்வு, ஜூன் 2019</u>

<u>தேர்வுத்துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) விண்ணப்பிக்கும் நாட்கள் குறித்த செய்திக் குறிப்பு</u>

**I. <u>மார்ச் 2019 தேர்விற்கு விண்ணப்பிக்க தவறியவர்கள் தட்கல் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்தல்:</u>**

மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கத் தவறிய தனித்தேர்வர்கள், ஜூன் 2019 மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத 08.04.2019 முதல் 12.04.2019 வரையிலான நாட்களிலும், சிறப்பு அனுமதி திட்டத்தின்கீழ் 15.04.2019 மற்றும் 16.04.2019 ஆகிய நாட்களிலும் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் சேவை மையங்களுக்கு சென்று இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

ஜூன் 2019, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத தேர்வுத்துறையால் அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட நாட்களில் ஆன்–லைனில் விண்ணப்பிக்கத் தவறிய தேர்வர்களின் கோரிக்கையினை ஏற்று சிறப்பு நிகழ்வாக தேர்வர்களின் நலன் கருதி மீளவும் சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) ஆன்–லைனில் விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**<u>ஆன்–லைனில் விண்ணப்பிக்க அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் (Govt.Examination Service Centres)</u>**

தனித்தேர்வர்கள் ஆன்–லைனில் விண்ணப்பிப்பதற்காக ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் அரசுத் தேர்வுத் துறை சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. **மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுக்கு விண்ணப்பிக்க தவறிய தனித்தேர்வர்கள்** தாங்கள் எந்த கல்வி மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கிறார்களோ, அந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்திற்கு **<u>09.05.2019 (வியாழக்கிழமை) மற்றும் 10.05.2019 (வெள்ளிக்கிழமை)</u> ஆகிய இரு தினங்களில் நேரில் சென்று ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.**

தனியார் Browsing Centre-கள் மூலம் விண்ணப்பிக்க இயலாது. கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்களின் விவரத்தை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

2..

**<u>தனித்தேர்வர்கள் சேவை மையத்தில் (Service Centre) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்</u>**

ஜூன் 2019 மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத **விண்ணப்பிக்க தகுதியானவர்கள்** பற்றிய விவரங்கள், சேவை மையத்திற்கு சென்று **விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்** மற்றும் தனித்தேர்வர்களுக்கான **அறிவுரைகள்** போன்ற விவரங்களை www.dge.tn.gov.in என்ற இவ்வியக்க இணையதளத்தில் விரிவாக காணலாம்.

**II. <u>மார்ச் 2019 தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள் தட்கல் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்தல்:</u>**

மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு (+1 Arrear) / மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வினை எழுதிய தேர்வர்களுக்கு 03.05.2019 முதல் 08.05.2019 வரை பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியின் வாயிலாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

மேற்காண் தேதிகளில் விண்ணப்பிக்க தவறிய மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு (+1 Arrear) / மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வினை எழுதிய தேர்வர்கள் "சிறப்பு அனுமதித் திட்டத்தின்" தங்களது மாவட்டத்திற்குரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் **<u>13.05.2019 (திங்கட்கிழமை) மற்றும் 14.05.2019 (செவ்வாய்கிழமை)</u>** ஆகிய இரு நாட்களில் தங்களது விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ள வேண்டும். **மார்ச் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு (+1 Arrear) / மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதியவர்கள் தமது மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகலினையும், தேர்வெழுதாதவர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினையும், விண்ணப்பத்தினை பதிவு செய்யும் அலுவலரிடம் கண்டிப்பாக காண்பிக்க வேண்டும்.**

**<u>தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் விநியோகம்</u>**

தேர்வுக் கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இணையதளத்தில் வெளியிடப்பட்ட அறிவுரைகளின்படி (தேர்வுக் கட்டண விவரம் தவிர்த்து) வயது வரம்பு, கல்வித் தகுதி மற்றும் பாடங்கள் வகைப்பாடு அறிந்து அதன்படி விண்ணப்பிக்க வேண்டும்.

தனித்தேர்வர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

| தேர்வர்கள் வகை | ஜூன் 2019 மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வு | | |
|---|---|---|---|
| | **தட்கல் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள்** | **விண்ணப்பிக்க வேண்டிய இடம்** | **தட்கல் திட்டத்தின்கீழ் செலுத்த வேண்டிய கட்டணம்** |
| மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு (+1) / இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தவறிய தேர்வர்கள் | **09.05.2019 (வியாழக்கிழமை) மற்றும் 10.05.2019 (வெள்ளிக்கிழமை)** | கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்கள் | • ஒரு பாடத்திற்கு ரூ.50/– + இதரக் கட்டணம் ரூ.35/–<br>• சிறப்பு அனுமதி கட்டணம் ரூ.1000/–<br>• ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/– |
| மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர் / வருகை புரியாதோர் | **13.05.2019 (திங்கட்கிழமை) மற்றும் 14.05.2019 (செவ்வாய்கிழமை)** | சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் | • ஒரு பாடத்திற்கு ரூ.50/– + இதரக் கட்டணம் ரூ.35/–<br>• சிறப்பு அனுமதி கட்டணம் ரூ.1000/–<br>• ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/– |

**ஒம்/–**

**இயக்குநர்**

இடம்: சென்னை–600 006.
நாள்: 07.05.2019.